செய்தி வெளியீட்டு எண் : 461 நாள்: 25.11.2021

# போர்க்கால அடிப்படையில் வெள்ள நிவாரண பணிகளை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது - மாண்புமிகு பொதுப்பணித்துறை (கட்டிடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தெரிவித்துள்ளார்

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், சூளாங்குறிச்சி கிராமம் மணிமுக்தா நதி அணையிலிருந்து மாண்புமிகு பொதுப்பணித்துறை (கட்டிடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.என்.ஸ்ரீதர், இஆப, சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.தா.உதயசூரியன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் திரு.க.கார்த்திகேயன் மற்றும் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.ஜே.மணிக்கண்ணன் ஆகியோர் முன்னிலையில் இன்று (25.11.2021) விவசாய பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைத்தார்.

தண்ணீர் திறந்து வைத்து மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் வடகிழக்கு பருவமழையினால் சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளை நேரில் சென்று ஆய்வு செய்து, உடனுக்குடன் மக்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை செய்து வருவதோடு, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள நீரினை வெளியேற்றி அப்பகுதிகளை இயல்பு நிலைக்கு மாற்றியுள்ளார்கள். மேலும், மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்புகளை தொடர்புடைய அமைச்சர் பெருமக்கள் ஆய்வு மேற்கொண்டு வெள்ள பாதிப்புகளை கண்டறிந்து உடனுக்குடன் நிவாரண பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள்.

தொடர்ந்து, வடகிழக்கு பருவமழையினால் கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், மணிமுக்தா நதி அணையிலிருந்து 24.11.2021 முதல் 10.02.2022 வரை 79 நாட்களுக்கு மொத்தம் 550.75 மி.க. அடிக்கு மிகாமல் திறந்துவிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி, இன்றைய தினம் மணிமுக்தா நதி அணை திறக்கப்பட்டுள்ளது. இவ்வணை திறப்பினால் 5493 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இதன்மூலம் கள்ளக்குறிச்சி மற்றும் சங்கராபுரம் வட்டத்தில் 17 கிராமங்கள் பயனடைகிறது. மேலும், நீர் வரத்திற்கேற்ப தொடர்ந்து அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட உள்ளது. தமிழ்நாடு முழுவதும் 103 ஆண்டுகளுக்கு பின்னர் அதிகளவு தற்போது மழை பெய்து வருகிறது. இதனால் தமிழகம் முழுவதும் உள்ள ஏரிகள் மற்றும் குளங்கள் நிரம்பி நீர் வெளியேறி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றதிலிருந்து கொரோனா பெருந்தொற்றிலிருந்து தமிழகத்தை மீட்டுள்ளார்கள். அதனைத் தொடர்ந்து, தற்போது மழை வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நேற்றைய தினம் தமிழகத்தில் மழை வெள்ள பாதிப்புகளை ஆய்வு மேற்கொள்ள வந்த ஒன்றிய அதிகாரிகள் குழுக்களிடம் தமிழகத்திற்கு தேவையான வெள்ள நிவாரணங்களை வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். தமிழகத்தில் வடகிழக்கு

பருவமழையினால், நெடுஞ்சாலைத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சுமார் 12 பாலங்களும், 364 பெரிய கல்வெட்டுகளும், பல இடங்களில் சாலைகளும் சேதமடைந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இச்சேதங்களை சரிசெய்ய முதற்கட்டமாக 152 கோடியும், முழுவதுமாக புதிய பாலங்கள் மற்றும் சாலைகள் அமைப்பதற்கு 1,443 கோடியும் மத்திய குழுவிடம் கோரப்பட்டுள்ளது. மழை வெள்ள சேதங்கள் தமிழகத்தில் அதிகமாக ஏற்பட்டபோதிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமது நிர்வாக திறனால் அவ்வப்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு ஆலோசனை வழங்கி, தமிழகம் முழுவதும் போர்க்கால அடிப்படையில் விரைந்து வெள்ள நிவாரண பணிகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிப்புகள் அதிகம் ஏற்படாதவாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கி அனைத்து முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளையும் சிறப்பாக மேற்கொண்டதால், பெருமளவு வெள்ள சேதாரங்கள் தடுக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த வடகிழக்கு பருவமழையினால் கிடைக்கப்பெற்றுள்ள நீரினை விவசாயிகள் முழுவதுமாக சேகரித்து விவசாயத்திற்கு பயன்படுத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது. விவசாயிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளும் இவ்வரசு செய்து வருகிறது. மேலும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள விவசாய இழப்புகளும், வீடுகள் இழந்தவர்களும் கணக்கீடு செய்யப்பட்டு உரிய நிவாரணம் வழங்க வருவாய் துறை மற்றும் சம்மந்தப்பட்ட துறை செயலாளர்களுக்கு கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மணிமுக்தா நதி அணையிலிருந்து வெளியேற்றப்படும் நீரினை விவசாயிகள் அனைவரும் பாசனத்திற்கு பயன்படுத்தி, அதிக மகசூல் பெற்று பயனடைய வேண்டும் எனவும், நீர் நிலைகளில் பொதுமக்கள் கவனமுடன் இருக்க வேண்டும் எனவும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.விஜய்பாபு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.இரா.மணி, கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் திரு.சரவணன், வேளாண் இணை இயக்குநர் (பொ) திரு.சுந்தரம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு.விஜயராகவன், பொதுப்பணித்துறை (நீர் வளத்துறை) செயற்பொறியாளர் திரு.இரா.பாஸ்கரன், உதவி செயற்பெறியாளர் திரு.கணேசன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திருமதி.பெ.புவனேஷ்வரி மற்றும் ஒன்றியக்குழு பெருந்தலைவர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

செய்தி வெளியீட்டு எண் : 462 நாள்: 25.11.2021

**கள்ளக்குறிச்சி மாவட்ட மருத்துவ கல்லூரி மருத்துவமனை விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என மாண்புமிகு பொதுப்பணித்துறை (கட்டிடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தெரிவித்துள்ளார்**

கள்ளக்குறிச்சி மாவட்டம், சிறுவங்கூர் கிராமத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் கள்ளக்குறிச்சி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையை மாண்புமிகு பொதுப்பணித்துறை (கட்டிடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.என்.ஸ்ரீதர், இஆப, சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.தா.உதயசூரியன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் திரு.க.கார்த்திகேயன் மற்றும் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.ஜே.மணிக்கண்ணன் ஆகியோர் முன்னிலையில் இன்று (25.11.2021) ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாய்வின்போது மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து அனைத்து திட்டப் பணிகளையும் விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி, கள்ளக்குறிச்சி மாவட்ட மருத்துவக்கல்லூரி மருத்துவமனை திட்டப்பணிகள் குறித்து இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இம்மாவட்டத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை 398.57 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் நிறைவுபெற்று வருகின்றன. இம்மருத்துவக்கல்லூரியானது 6 தளங்களை கொண்டதாகவும், 700 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை கட்டிடத்தில் கதிரியக்கத்துறை, மருத்துவக்கிடங்கு, மருந்தகம், இரத்த வங்கி, ஆய்வகம், அவசர சிகிச்சை பிரிவு, புற நோயாளிகள் பிரிவு, 8 அறுவை அரங்கங்கள், 2 அவசர அறுவை சிகிச்சை அரங்கங்கள், 6 சிறிய அறுவை சிகிச்சை அரங்கங்கள், 8 தீவிர சிகிச்சை பிரிவு அறைகள், 88 அறைகள் கொண்ட சி.ஆர்.ஆர்.ஐ. ஆண்கள், பெண்கள் விடுதிகள், உணவுக்கூடம், நவீன சமையலறை கூடங்கள், பிரேத பரிசோதனை அறை உள்ளிட்ட மருத்துவமனை கட்டிடங்களுக்கான இறுதி கட்ட பணிகள் நடைபெற்று வருவது குறித்து இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், இம்மருத்துவக்கல்லூாயில் துறை தலைவர்கள், பேராசிரியர்கள் அறைகள், துறை பேராசிரியர்கள் அறைகள், 150 இருக்கைகள் கொண்ட 4 விரிவுரையாளர் அரங்கங்கள், அருங்காட்சியகம், ஆராய்ச்சி ஆய்வகம், தேர்வறை, மத்திய நூலக அறை, திறனாய்வகம், 545 இருக்கைகள் கொண்ட கருத்தரங்க கூடம், வங்கி மற்றும் தபால் நிலையங்கள், சிற்றுண்டி, உடற்பயிற்சி நிலையம், 258 மாணவ மாணவியர்களுக்கு தனித்தனியே விடுதி கட்டிடங்களும், கல்லூரி முதல்வர் மற்றும் அலுவலர்களுக்கு குடியிருப்புகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் உள்ளடக்கிய இக்கல்லூரி கட்டுமானப் பணிகள் நிறைவுபெற்று வருகின்றன. இக்கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திடவும் இம்மருத்துவக்கல்லூரி மருத்துவமனையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரக்கரங்களால் விரைவில் திறந்து வைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது. இம்மருத்துவமனை இம்மாவட்ட மக்களுக்கு மிகவும் பயனள்ளதாக அமையும் என பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இவ்வாய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.விஜய்பாபு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.இரா.மணி, கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் திரு.சரவணன், பொதுப்பணித்துறை (மருத்துவமனை கட்டிடங்கள் மற்றும் பராமரிப்பு) செயற்பொறியாளர் திரு.இரா.மணிவண்ணன், உதவி செயற்பொறியாளர் திரு.சுப்பையா, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திருமதி.பெ.புவனேஷ்வரி மற்றும் ஒன்றியக்குழு பெருந்தலைவர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

செய்தி வெளியீட்டு எண் : 463 நாள்: 25.11.2021

**"இல்லம் தேடி கல்வி திட்டம்" தொடக்க கல்வி கற்கும் மாணவர்களுக்கு மிக சிறப்பு வாய்ந்த பயனுள்ள திட்டமாகும் - மாண்புமிகு பொதுப்பணித்துறை (கட்டிடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் பெருமிதம்**

கள்ளக்குறிச்சி மாவட்டம், சிறுவங்கூர் ஊராட்சி, ரோடு மாமாந்தூர் பகுதியில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் இல்லம் தேடி கல்வி திட்ட விழிப்புணர்வு கலைப்பயணத்தினை மாண்புமிகு பொதுப்பணித்துறை (கட்டிடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப, சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.தா.உதயசூரியன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் திரு.க.கார்த்திகேயன் மற்றும் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.ஜே.மணிக்கண்ணன் ஆகியோர் முன்னிலையில் இன்று (25.11.2021) தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது கல்வி என்பதை நன்கு அறிந்து, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னுதாரணமாக இந்தியாவிலேயே முதன் முதலாக "இல்லம் தேடி கல்வி திட்டம்" எனும் மாபெரும் சிறப்பு வாய்ந்த திட்டத்தினை அறிவித்து, இத்திட்டத்திற்காக சுமார் 200 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, அக்டோபர் 26-ம் தேதி தொடங்கி வைத்தார். கொரோனா பெருந்தொற்று பரவல் காரணமாக 1 முதல் 8 வகுப்பு வரை பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றல் இடைவெளி மற்றும் இழப்புகளை ஈடு செய்வதற்காக தன்னார்வலர்களை கொண்டு தினசரி 1 மணி முதல் 1.30 மணி நேரம் (மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை) குறைதீர் கற்றல் செயல்பாடுகளை மேற்கொண்டு மாணவர்கள் கற்றல் திறனை மேம்படுத்திடும் வகையில் இந்த இல்லம் தேடி கல்வி திட்டம் செயல்படும்.

இத்திட்டம் ஒரு தன்னார்வலர்கள் அடிப்டையிலான 1 முதல் 8-ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கான மாலைநேர அரவணைப்பு மைய திட்டமாகும். ஊரின் பள்ளியையும், கிராமத்து மனிதர்களையும் இணைக்கும் திட்டமாகவும், சிதைந்து போன கல்வியை சீதனமாய், சிங்காரமாய், உள்ளூரில் படித்த இளைஞர்களை கொண்டு, கற்பதை கற்கண்டாக தரும் இயக்ககமே, "இல்லம் தேடி கல்வி திட்டமாகும்". இல்லம் தேடி கல்வி திட்டத்தின் முக்கியத்துவத்தினை தெரு நாடகங்கள், பொம்மலாட்டம், நடனம் மற்றும் பாடல்கள் போன்றவற்றின் மூலம் உள்ளுர் நாட்டுப்புற கலைஞர்களின் உதவியுடன் கள்ளக்குறிச்சி மாவட்டத்திலுள்ள 9 ஒன்றியங்களில் 338 பள்ளிகளிலும், 338 குடியிருப்பு பகுதிகளிலும் 9 நபர்கள் கொண்ட 5 குழுக்களாக நாட்டுப்புற கலைஞர்கள் விழிப்புணர்வினை ஏற்படுத்த உள்ளார்கள்.

மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளாக, கொரோனா தொற்றின் காரணமாக பள்ளிகள் முழுமையாக செயல்பாடாமல் இருந்ததினால், மாணவர்களுக்கான கற்றல் இடைவெளியை குறைத்திடும் வகையில், குறிப்பாக தொடக்க கல்வி மாணவர்களுக்கு மிக அவசியமான ஒன்றாக கருதிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உலகத்தில் எங்கும் காண இயலாத இல்லம் தேடி கல்வி எனும் ஒரு அற்புதமான திட்டத்தை அறிமுகப்படுத்தி, செயல்படுத்தி உள்ளார்கள். இத்திட்டத்தினை முழுமையாக செயல்படுத்திட தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்கி,

அனைத்து மாணவர்களுக்கும் தொடக்க கல்வியினை சிறப்பாக கொண்டு சேர்த்திட முன்வரவேண்டும். இல்லம் தேடி கல்வி திட்டம் தொடக்க கல்வி கற்கும் மாணவர்களுக்கு மிக சிறப்பு வாய்ந்த பயனுள்ள திட்டமாகும். இதனை மாணவர்கள், பெற்றோர்கள் முழுமையாக பயன்படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியின்போது, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திருமதி.பெ.புவனேஷ்வரி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.த.விஜயலட்சுமி, முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்கள் திரு.ஏ.கே.கோபி, திரு.ஆனந்தன், மாவட்ட கல்வி அலுவலர் திருமதி.க.கார்த்திகா (உளுந்தூர்பேட்டை), கள்ளக்குறிச்சி பள்ளித்துணை ஆய்வாளர் திரு.என்.செந்தில்குமார், வட்டார கல்வி அலுவலர்கள், கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள், வட்டார ஆசிரிய பயிற்றுநர்கள், ஒன்றியக்குழு பெருந்தலைவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

<u>செய்தி வெளியீடு:</u>

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.